1972 ஆகஸ்ட் 23]

பிடித்துக் கொண்டு கும்முடிப்பூண்டிக்குச் சென்று தான் வாங்க வேண்டியிருக்கிறது. அங்கே துணைக் கிடங்கு ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று பஞ்சாயத்து ஒன்றியத்திலே கூட தீர்மானம் போட்டு அனுப்பி வைத்து இருக்கிறது. அதை அரசு ஏற்று, மறு பரிசீலனை செய்து, அங்கே ஒரு துணைக் கிடங்கு ஒன்று ஏற்படுத்தித் தர முன்வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பஞ்சாயத்து ஒன்றியம் அந்தக் கிடங்கு ஏற்படுத்த ஆகும் முழுத் தொகையையும் கொடுக்க முன்வந்தால், அதை வேளாண்மைத் துறை அங்கீகரிக்கும்.

Cultivation of Jasmine

* 291 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have received proposals from the Collector of Dharmapuri, recommending the cultivation of jasmine flowers in Hosur and Denkanikota taluks; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, jasmine is coming up very nicely in Hosur and Denkanikota taluks. There is good demand for it in Bangalore and Bombay and jasmine scent is exported to other countries. May I know from the Hon. Minister whether this Government would come forward with concrete programmes so as to produce jasmine plants at Hosur and Denkanikota taluks?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இது வரையில் நம்முடைய மாநில சர்க்காரோ, மத்திய சர்க்காரோ இதற்கான திட்டம் கொண்டு வரவில்லை. அது பற்றிய திட்டம் இல்லையென்றாலும் இப்போது பெங்களூர் போன்ற மற்ற ஊர்களுக்கு பூக்கள் அனுப்பிக் கொண்டு இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் திட்டம் இல்லாமலேயே இன்றைக்கு கிட்டத்தட்ட மல்லிகை 2,000 ஏக்கரிலும், செவ்வந்திப் பூ 400 ஏக்கரிலும்,

கனகாம்பரம் சுமார் 200—300 ஏக்கரிலும், மருவு 50 ஏக்கரிலும் சாகுபடி செய்து இருக்கிறோம். இதற்கு தமிழக சர்க்காரிலும், மத்திய சர்க்காரிலும் ஒரு திட்டம் கொண்டு வர வேண்டுமென்று ஆலோசனை கூறியிருக்கிறோம். அது விரைவில் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

ஓட்டல் தொழில்

* 292 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரிய ஓட்டல்களை அரசுடைமையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஓட்டல்களை அரசுடைமையாக்கும் திட்டம் தற்போது இல்லையென்றாலும், டெல்லியில் மத்திய அரசு அசோகா ஓட்டல் நடத்துவது போன்று, நம்முடைய அரசும் 5 நட்சத்திர ஓட்டல் ஒன்றைக் கட்டி, வெளிநாட்டுப் பயணிகளை ஈர்க்கும் வகையில் முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன். சென்னையில் 65 மாடி ஓட்டல் ஒன்று கட்டுவதற்கான முயற்சி எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அரசு சுற்றுலாத் துறையின் மூலமாக அப்படிப்பட்ட ஓட்டல் ஒன்று கட்டுவதற்கான உத்தேசம் இல்லை. 65 மாடி ஓட்டல் கட்டுவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : சார், பெரிய ஓட்டல்களை அரசுடைமையாக்காவிட்டாலும்—அரசுடைமையாக்கும் திட்டம் மக்களுக்கு எளிதான வகையில், குறைந்த விலையில் சாமான்கள் கிடைக்க வேண்டுமென்பது தான்—அதையாவது செய்து கொடுக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, ஓட்டல்களை அரசாங்கம் ஏற்று நடத்தும் திட்டம் இல்லை. சுற்றுலா வாரியத்தைப் பொறுத்த வரையில் ஓட்டல்களைத் திறந்து